முருகப்பெருமான் துணை

**மகான் அருணகிரிநாதர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**25.09.2022**, ஞாயிற்றுக்கிழமை

1. மனமெனும் குதிரையை அடக்கி
   மாதவ சக்தி பயனை எட்ட
   தினம்தினம் ஞானிகள் நாமசெபம்
   தேசிகன் அனுகூலமுடன் செய்துவர
2. வருவோர்க்கு கலியினில் மாற்றம்
   வரமாகக் கிட்டுமெனக் கூறி
   தருகின்றேன் அனுகூல ஆசி
   தக்க சுபகிருது தரிவை திங்கள்
3. திங்களிலே அட்டம திகதி கதிர்வாரம்
   **(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 08ம் நாள், 25.09.2022** ஞாயிற்றுக்கிழமை**)**
   தேசிகன் கேட்க உலகமக்களுக்கு
   ஓங்காரம்பட அருணகிரிநாதரும் உரைப்பேன்
   ஓதிடுவேன் முருகப்பெருமான் தானும்
4. தானுமே பலகோடி ஞானியர்க்கு
   தந்த காட்சி வரத்துக்கும் மேலே
   ஞான தேசிகனுக்கு ஆற்றலை
   ஞானமுடன் அன்னதானம் கலந்த
5. கலந்த வரமாக அருளியே
   கலசமுனி நாங்கள் எல்லாம்
   கலந்திட அனுமதி தந்துமே
   கண்டபின்னும் மாற்றம் வேணுமென
6. வேணுமென அரங்க ஞானிக்குள்
   வேலவனே கலந்து விட்டதால்
   ஞானசபையாக மட்டும் அல்லாது
   ஞாலமதில் அரங்கன் வாழ் குடில்
7. குடிலும் ஞானிகளும் சூழ்ந்த
   குருபரன் ஆட்சிபுரிகின்ற நல்
   சுடர்மிக்க ஏழாம்படை வீடானது
   சுருதிபடி கலியுகமக்கள் எல்லாம்
8. எல்லோரும் இந்த சூட்சுமம் அறிந்து
   இணைந்து வந்து பயனுறவே
   வல்லமைபட அருணகிரியும் சொன்னேன்
   வரமென நம்பிக்கை வைத்து
9. வைத்து வந்தவர்க்கு காப்பு
   வடிவேலனால் கிட்டுமப்பா
   நத்தியே அன்னதான சேவையை
   நம்பிக்கையோடு செய்யும் மக்கட்கு

10. மக்கட்கு மாதவசி அரங்கனாக
மண்ணுலகில் வேலவன் காட்சி
ஆக்கமுடன் அனுகூலம் ஆகும்
அதன்பின் அவரவர் தேறிட
11. தேறிட ஞான சித்திகள் ஆகி
தேசிகன் அவதார அம்சமாக
மாறிடும் கலியினில் ஞான ஆட்சி
மொழிந்திட்ட அனுகூல ஆசி முற்றே

–சுபம்–